செய்தி வெளியீடு எண். 958 நாள் 11.12.2009

# அரசு செய்தி வெளியீடு – 11.12.2009

ஈரோடு மாவட்டம், பவானி, சங்கமேஸ்வரர் கோயிலில் – மேல் மண்டபத்தின் கூரையில் அமைக்கப்பட்டிருந்த காங்கிரீட் தாமரை வடிவ சிற்பம் நேற்று திடீரென்று பெயர்ந்து விழுந்ததின் காரணமாக திருப்பூர் பிச்சம்பாளையத்தைச் சேர்ந்த 72 வயதான துரை ராஜ் என்பவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூன்று பேர் காயம் அடைந்துள்ளனர். இந்தச் செய்தியினையறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இறந்தவரின் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் குடும்பத்திற்கு நிவாரண நிதியாக ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கிட ஆணையிட்டுள்ளார். மேலும் காயம் அடைந்த மூன்று பேருக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கவும் முதல் அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார். இந்த விபத்துக்கான காரணத்தையும், இதற்கு யார் பொறுப்பு என்பதையும் விசாரித்து அறிவிக்கும்படியும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

* * *